உ
சிவமயம்

Register  as a N
paper  eylon
P. M. G. NO. H. A
59/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ம் திகதி ஆரம்பமான ௧

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும் மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈசனெந்தை யிணையடி நீழலே

புத். ௫௫] யாழ்ப்பாணம்:—சுபானுஸு ஆவணிமீ ௨௪ உ ( 1943 செப்டம்பர்மீ 9 வியாழக்கிழமை) [இல. ௬௩


## இத்தாலியில் பாமி நகரம்

### நேசப்படை வசமாயிற்று

லண்டன் செப் 7—

பிரிட்டிஷ் கனேடியத் துருப்புகள் இத்தாலியில் மேலும் ஆறு மைல் தூரம் முன்னேறிப் பாமி என்னும் கடற்கரை நகரைக் கைப்பற்றிவிட்டனவென்று இன்று ஜெனரல் ஈசன்ஹோவரால் அறிவிக்கப்பட்டது. இவர்கள் கடந்த வெள்ளிக்கிழமை ரெகியோவுக்கு சமீபத்தில் இறங்கிய இடத்திலிருந்து 40 மைல் தூரம் முன்னேறியிருக்கின்றனர். உள்நாட்டிலுள்ள நேசதேசத் துருப்புகள் டெலியனோவா கிராமத்தைக் கைப்பற்றியிருக்கின்றன.

நேசதேச விமானங்கள் அச்சு நாட்டினரின் போக்குவரத்துச்சாதனங்களைத் தாக்குகையில் நேற்று அலாட்டாமெளராவில் புதிய இலக்குகளைக் கண்டுபிடித்தன.

அல்ஜியேர்ஸ் ரேடியோவால் ஒலிபரப்பப்பட்ட வட ஆபிரிக்க நேசதேச அறிக்கை கூறுவதாவது:- சத்துருவின் பலத்த நாசவேலைகளினாலும் கரடுமுரடான பிரதேசத்தினாலும் இடைஞ்சல் ஏற்பட்ட போதினும் நமது துருப்புகள் நேற்று முழுவதுந் தொடர்ந்து முன்னேறின. நாம் பாமி நகரையும் டெலியனோவா கிராமத்தையும் கைப்பற்றியிருக்கின்றோம். இதுவரை சத்துருவின் எதிர்ப்புக் குறைவாகவே இருந்தது இத்தாலியிலுள்ள நமது படைகள் அதிகரித்தவண்ணமாகவே இருக்கின்றன.

## இத்தாலியில் மேலும் பத்து நகரங்கள் கைப்பற்றப்பட்டன

வட ஆபிரிக்காவிலுள்ள நேசதேச தலைமைக்காரியாலயம் செப் 6

எட்டாவது சேனை இன்று மேலும் 10 கிராமங்களையும் நகரங்களையும் கைப்பற்றிக்கொண்டு வடக்குப் பக்கத்தாற் பாமியை நெருங்கிக் கொண்டிருக்கிறது.

அமெரிக்க ஆகாயவசனி விமரிசகரான மின்றர். ஜோன் டாலி இன்றிரவு பின்வருமாறு கூறினார்:- இத்தாலியருக்கும் அவர்களுடைய நண்பர்களான ஜெர்மானியர்களுக்கும இடையில் நடைபெறும் சண்டைதான் இப்போது இத்தாலியின் பாகத்தில நடைபெறும், யுத்தத்தில் பிரதானமானதாக இருக்கிறது. இத்தாலியர்களை நிர்க்கதியாகக் கைவிட்டு விட்டு மீண்டுமொருமுறை ஜெர்மானியர் பின்வாங்கிய போதுதான் இந்தச் சக்களத்திப் போராட்டம் ஏற்பட்டது.

## பாடசாலைகளுக்குடிஸ்திறிக் வித்தியாதரிசிகள்

கல்விப்பட்டம் பெற்றவர்களை மட்டும் பாடசாலைகளின் டிஸ்திறிக் வித்தியா தரிசிகளாக நியமிக்க வேண்டுமென்று கல்வி நிர்வாகசபை தீர்மானித்திருக்கிறது. இதுவரை வித்தியாதரிசிகளே அப்பதவிகளுக்கு உயர்த்தப்பட்டு வந்தனர்.

## சீனத்தலைவர்க்குச் சர்ச்சிலின் பாராட்டு

லண்டன் செப் 5—

சீனப்பிரதம மந்திரி சியாங்கை ஷேக் அனுப்பிய ஒரு தந்திச் செய்தியில் பின்வருமாறு கூறியிருக்கிறார்:-

ஆக்கிரமிப்பாளருக்கெதிராக நாம் ஆயுதந்தரித்துப் போருக்கிறங்கிய நான்காவது வருடத்தில் தாங்களனுப்பிய உணர்ச்சி மிகுந்த செய்திக்காக இந்நாட்டு மக்களின் சார்பாகவும் நான் தங்களுக்கு மனப்பூர்வமான நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அன்றிருந்து இன்றுவரை இறைவனின அனுக்கிரகம் நமது கட்சியிலிருப்பதனாலேயே நாம் வரவர வெற்றி ஈட்டிக்கொண்டு வருகிறோம். யுத்தம் எதிர்காலத்தில் நீண்டதாகவும் கஷ்டமானதாகவும் இருக்குமெனினும் நமக்கு வெற்றியில பூரண நம்பிக்கை இருக்கிறது.

## தொண்டமானாறு செல்வச்சந்நிதி மகோற்சவம்

தொண்டமானாறு செல்வச் சந்நிதியில் இப்பொழுது மகோற்சவம் நடைபெற்று வருகின்றது. இந்த செப்டெம்பர் மாதம் 13-ந் திகதி திங்கட்கிழமை இரவு இரதோற்சவமும் அடுத்த நாளாகிய அமாவாசைத தினத்தன்று தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

இச்செல்வச் சந்நிதித் தலத்திற்கு உற்சவத்தின்பொருட்டுச் செல்வோர் அரிசி நெல் கொண்டுவருவரேல் அவர்களை அங்ஙனம் கொண்டு போகவொட்டாது தடுக்கவேண்டாமெனக் கட்டுப்பாட்டுப்பகுதியதிகாரிகள் தலைமைக்காரருக்குத் தெரிவித்திருக்கிறார்களென்றும் யாராயினும் தடைசெய்யப்பட்டோர் சந்நிதானத்திலே தெரிவிக்கலாமென்றும் மேற்படி கோவிலதிகாரியாகிய திரு. கா. முத்துக்குமாரு தெரிவிக்கிறார்.

## கள்ளத்தனமாக இலங்கைக்கு ஏற்றுமதி

### 2500 ரூபா மதிப்புள்ள சாமான்கள் கைப்பற்றப்பட்டன

இராமநாதபுரம் செப் 3

மண்டபம் சரகம் இருமேனி கடற்கரையிலிருந்து ஏறக்குறைய ரூபா 2500 மதிப்புள்ள சைக்கிள் 'டயர்'கள் ஷாப் சாமான்கள் ஆகியவற்றைச் சாதாரண படகிலேற்றி இலங்கைக்குத் திருட்டுத் தனமாகக் கொண்டுசெல்ல முயற்சித்த இருவர் கீழக்கரைப் பொலிஸ் ஹெட் கொன்ஸடபிள் வெங்கடேசுவரய்யர் முதலியோரால் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர். படகும் கைப்பற்றப்பட்டிருக்கின்றது. கடற்கரையை அடுத்த இடங்களிலும் சில சாமான்களைப் பொலிசார் தோண்டியெடுத்தனர். பொலிசார் மேற்கொண்டு புலன் விசாரித்து வருகின்றனர். கைது செய்யப்பட்ட இருவரும [illegible] காவலில் வைக்கப்[illegible]னர்.

## இந்தியாவில் ஜவுளி விலை

புதுடில்லி செப் 3

ஜவுளிநூல் விலைகளை அரசாங்கம் கட்டுப்படுத்தி நிர்ணயித்ததன் பலனாக இப்போது ஜவுளி விலையில் 40 சத விகிதம் குறைந்து விட்டதாகத் தெரிய வருகிறது. இனிமேல் ஜவுளி விலை அரசாங்க விலைக்குமேல் உயரப்பட விடமாட்டாது என்று உறுதியாகத் தெரிய வருகிறது. சில ஆலைகள் அரசாங்க விலைக்கு 2அணா குறைத்து லேபலோடு துணிகளை விற்கின்றன. அரசாங்க நிர்ணய விலையும் துணி உற்பத்தி தடைப்படாதிருக்கும் முறையில் நியாய விகிதத்தில் நிர்மாணிக்கப்பட்டிருப்பதும் எடுத்துக் காட்டப்படுகிறது.

## வேருவளைப் பட்டின சபைத் தொகுதிகள்

வேருவளைப் பட்டின சபையின் தேர்தல் தொகுதிகளைத் திருத்தியமைப்பது பற்றிப் பட்டினசபை அங்கத்தவர்களும் வரி செலுத்துவோரும் ஸ்தல ஸ்தாபனக் கொமிஷனருக்கு விண்ணப்பித்துக்கொண்டனர்.

கொமிஷனரும் களுத்துறை உதவிமாகாணத் தலைவரும் குறித்த விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்தனர். இவர்கள் தங்கள் பரிசீலனை சம்பந்தமான அறிக்கையொன்றை ஸ்தல ஸ்தாபன நிர்வாகசபையிடம் சமர்ப்பிப்பர்.

பட்டினசபைப் பகுதியை எட்டுத் தேர்தல் தொகுதிகளாகப் பிரிக்க வேணடுமென்பது சபையின் அபிப்பிராயமென்று சொலலப்படுகிறது. தேர்தல் தொகுதிகளைப் பத்தாக அதிகரிக்கும்படி வரி செலுத்துவோர் கேட்டுக் கொண்டதாகத் தெரிகிறது.

## கொன்சர்வேட்டிவ் கும்பலின் ஏகாதிபத்திய வெறி

லண்டன் (தபால்)

யுத்தத்திற்குப் பின், உலகைத் திருத்தி அமைக்கும் பொழுது பிரிட்டன் தன் சாம்ராஜய உரிமைகளை விட்டுக் கொடுக்கக் கூடாதென்று கொன்சர்வேட்டிவ் கட்சிக்காரர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள்.

இது விஷயமாக ஒரு கொன்சர்வேட்டிவ் பிரபலஸ்தரைப் பேட்டி கண்டபொழுது பிரிட்டன் தன் சாம்ராஜ்யங்களைக் கைவிட்டால் அந்த நாடுகளுக்கு அனர்த்தம் வந்துசேரும் என்று கூறினார்.

## பல்கேரியாவின் பிரதம ரீஜெண்ட்

லண்டன் செப் 6—

காலஞ்சென்ற போரிஸ் மன்னரின் சகோதரரும் ஜெர்மனிமீது அனுதாப முள்ளவருமான சிரில் இளவரசர் பல்கேரியாவின் பிரதம ரீஜெண்டாகநியமிக்கப்பட்டிருக்கிறாரென்று புகாரெஸட் பத்திரிகை [illegible]தாக ரோமாபுரி [illegible] நேற்றிரவு கூறியது.

## மகோற்சவமும் சைவப் பிரசங்கமும்

மண்டைதீவு சித்திவிநாயகர் கோவிலில் 8-ந் திருவிழாவாகிய வருகிற சனிக்கிழமை (11-9-43) வழக்கம் போல் 10 மணி தொடக்கம் திரு. சி. பசுபதிச் செட்டியார் அவர்களின் உபயமாக விசேஷ அபிஷேக ஆராதனைகளும் இரவு தெல்லிப்பழை ஆசிரியர் திரு. வே. சங்கரப்பிள்ளை அவர்களால் 'இளையான் குடி மாற நாயனார்' என்னும் விஷயமாகச் சங்கீத கதாப்பிரசங்கமும், பின் விசேஷ உற்சவமும் நடைபெறுமென அறியலானோம்.

## ஸ்ரீமத். சுவாமி விபுலானந்தர் அவர்கட்கு உபசரணைக் கூட்டம்

நிகழும் சுபானு வருஷம் ஆவணி மாசம் 30உ (15-9-43) புதன்கிழமை மாலை $5\frac{1}{2}$ மணிக்கு, கொழும்பு நகரசபை மண்டபத்தில (Town Hall, Colombo) கல்வி, அறிவு, நறவொழுக்கம் முதலியவற்றில் சிறந்து விளங்கும் பேரறிஞரும், இலங்கைப் பல்கலைக் கழகத்தில் (University of Ceylon) தமிழ்ப் பெரும் பேராசிரியர் பதவியை (First professor of Tamil) முதன் முதல் ஏற்றுச் செவ்வனே நடத்துபவரும், தமிழ்க் கலையின் ஆக்கங் கருதி உழைத்து வருபவருமாகிய உயர்திரு. சுவாமி. விபுலானந்த அவர்களுக்கு, அத்துவக்காத் திரு. ந. நடராசா K. C., உணவுக் கட்டுப்பாட்டதிகாரி திரு. க. கனகரத்தினம் முதலிய பெரியார்களின் நன்முயற்சியால், கொழும்பு விவேகானந்தசபை, வெள்ளவத்தை ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன், கொழும்புத தமிழ்க்கழகம், வெள்ளவத்தை நாடக அபிவிருத்திச்சபை, இலங்கைச் சைவ பரிபாலனசபை, வெள்ளவத்தைச் சைவமங்கயர் கழகம், இலங்கைப் பல்கலைக் கழகத்தின தமிழ்ச்சபை, முதலிய சபைகளெல்லாம் ஒன்று சேர்ந்து, ஓர் உபசாரணைக் கூட்டம நடத்துவார்களென, அக்கூட்டத்தின் நிர்வாக சபையின் காரியதரிசியாகிய திரு. அருள். தியாகராசா அவர்கள் தெரிவிக்கின்றார்கள்.

## மணிவிழாக் கொண்டாட்டம்

நிகழும் சுபானு வருடம் ஆவணி மாசம் 9-ந் திகதி புதன்கிழமை மாலை 6 மணியளவில் சூராவத்தை அம்மன் கோவிலில் திருவாளர். திரு. வி. கலியாண சுந்தர முதலியாரவர்கள் அறுபது ஆண்டு நிறையப் பெற்ற மங்கல விழா வெகுவிமரிசையாய்க் கொண்டாடப்பட்டது. அத்தருணம் சமரச சன்மார்க்க சங்கச் சொற்பொழிவுகள் இருவரால் நிகழ்த்தப் பெற்றன. முதலாவது பேச்சாளர் சுன்னாகம். திரு. அ. குமாரசுவாமிப் புலவர் மகன் முத்துக்குமாரசுவாமி B. A. அவர்கள். இரண்டாவது பேச்சாளர் திரு. ச. பொன்னுத்துரை பாலபண்டிதர் அவர்கள்.

—கடித

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் சுபானு௵
ஆவணிமீ உசவ வியாழக்கிழமை

## யாழ்ப்பாணம் சைவமகளிர் கல்லூரி

நாளைத்தினம் (10-9-43) யாழ்ப்பாணம் சைவமகளிர் கல்லூரி ஆரம்பமாகுமென்பது முந்தியே தெரிவிக்கப்பட்ட விஷயம். யாழ்ப்பாணத்திலுள்ள சைவப் பெண்மக்களுக்குச் சைவசமயம் தமிழ்ச்சாதி என்னுமிவைகட்குரிய பழக்க வழக்க ஒழுக்கங்களிற் சிறிதேனுந் திறம்பாது தமிழ்க் கல்வியையும் ஆங்கிலக் கல்வியையும் ஒக்க ஊட்டவேண்டுமென்பதே குறித்த இக்கலாசாலையை இப்பொழுது ஆரம்பிப்பவர்களாகிய யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அதிகார சபையாரின் பிரதான நோக்கமென்று எண்ணுகிறோம். கல்வியெனப்படுவது ஆண் பெண்ணென்ற பால் வேற்றுமையும், சைவம், கிறீஸ்துவம், பௌத்தம், இஸ்லாமியமென்ற சமய வேற்றுமையும், தமிழர் சிங்களர், ஸ்லாமியர், ஐரோப்பியர் என்ற சாதிவேற்றுமையுமில்லாத பொதுப் பொருளாகும். அப்படியான பொதுத்தன்மையோடு கூடிய கல்வியை ஊட்டும்போது எந்தச் சாதியினர்க்கு எந்தச் சமயத்தினர்க்கு எந்தப் பாலினருக்கு ஊட்டப் புகுகின்றார்களோ, அந்தச் சாதிக்கு அந்தச் சமயத்திற்கு அந்தப் பாலிற்குத் தக்கபடி ஊட்ட முயல்வதே கல்வியை விருத்திசெய்வோரின் பெருங் கடனாகும்.

எனவே, தமிழ்ச் சைவச்சிறுமியர்க்குக் கல்வியூட்டப் புகும்போது, தமிழச்சாதியென்ற முறைக்கும், சைவசமயமென்ற கொள்கைக்கும் எவ்வாற்றானும் முரண்படாமற் கல்வியூட்டவேண்டுமென்பதே மேற்படி கல்வியதிகார சபையார் கொண்ட மேலான நோக்கம் போலும். இக்கலாசாலையில சமயக் கல்விக்கும் தமிழ்க் கல்விக்கும் பிரதான இடங் கொடுத்தல் ஆவசியகம்; பழைய தமிழர்நாகரீகம், தமிழ மூதாட்டியர்களின மேலான கொள்கைகள என்னுமிவைகள இன்றியமையாது பயிற்றப்படல உத்தமமாகும். ஆங்குள்ள சிறுவர் ஆங்கிலம் கற்கும நோக்கமவேறு, சிறுமியர் ஆங்கிலம கற்கும நோக்கம் வேறென்பது மேற்படி அதிகாரசபையார் அறியாததலல. ஆங்ஙனமெல்லாமிருத்தலினால், இப்பொழுது ஆரமபிக்கப்படும சைவமகளிர் கல்லூரி இங்குள்ள ஏனைய பெண்கள் கல்லூரிகட்கெல்லாம் பின்பற்றத்தக்க ஒரு கலாசாலையாகக் காலகதியில் வந்துவிடுமென்பதே நாம் எதிர்பார்த்திருக்கத்தக்கது.

இக்கல்லூரியானது இதனைத் தாபிப்போர் கொண்ட நோக்கங்களைப் பூர்த்தியாக்குமிடமாதற்கு இன்னுஞ் சில காலமுண்டு; இக்கல்லூரி இப்பொழுது அன்றன்று தங்கள் தங்கள் வீடுகளில் வந்து பயின்றுபோதற்காகிய மாணவர்களையே ஏற்கத்தக்கதாக ஆரம்பிக்கப்படுகின்றது. காலகதியில் இது ஒரு பெண்விடுதிக கல்லூரியாகும். அங்ஙனமான பின்பே, மேலே எடுத்துக்காட்டப்பட்ட நோக்கங்களும் கொள்கைகளும் உயர்தரக் கல்வியும் இக்கலாசாலை வாயிலாகப் பெறத்தக்கவாகும். ஆனதால், ஆரம்பதசையிலுள்ள இக்கலாசாலையை உந்நதமான பூரண கல்லூரியாகச் சமைத்தற்கு இலங்கையிலுள்ள சைவாபிமானிகளின பொருளுதவியும் அபிமானமுமே இன்றியமையாதனவாகும். குறித்த அபிமானிகள தங்களால ஆனமட்டும் உதவி செய்வார்களென்பது, இப்பொழுதே அவ்வபிமானிகளிற் பலர் பொருளுதவி செய்ய முற்பட்டு நிற்பதைககொண்டு அறியத்தகும். எங்ஙனம யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியை இற்றைக்கு 53 வருடங்கட்கு முந்தித் தாபித்த பெரியார்களின புகழ் அழியாது நின்று உலவுகிறதோ, அப்படியே இப்பெண் கல்லூரியை ஆரம்பிக்கும் அபிமானிகளின் பெரும் புகழும் எந்நாளும் நின்று நிலவுமென்பதற்கு ஐயமில்லையெனலாம்.

## தேயிலை வியாபாரிகளின் கூட்டம்

அகில இலங்கைத் தேயிலை வியாபாரிகள் சங்கம் தொழில் வர்த்தக மந்திரியைப் பேட்டிகாணும் பொருட்டும் தாம் மந்திரிமாருக்கும் அரசாங்கசபை அங்கத்தினருக்கும் அனுப்பியுள்ள அறிக்கையின நகலொன்றை இலங்கையிலுள்ள இந்திய அரசாங்கப் பிரதிநிதியான மிஸ்றர். எம். எஸ். ஆனேக்கு அனுப்புமபொருட்டு இயமாத ஆரம்பத்தில் ஒரு பொதுக்கூட்டம தீர்மானித்திருக்கிறது.

## மற்றோர் இலங்கை விமானி மரணமானார்

இலங்கையைச் சேர்ந்த விமான அதிகாரியான மிஸ்றர். டி. கிரெட்ஸர் யுத்த நடவடிக்கையின்போது மரணமானார். 20 வயதான இவர் கல்கத்தாவில் பர்மா அரசாங்கத்தின் தற்காலிகப் பிரதிநிதியாகக் கடமையாற்றிவரும் இந்திய சிவில் சேர்விஸ் அதிகாரி மிஸ்றர். ஸி. பி. டி. கிரெட்சரின் புதல்வராவர்.

இங்கிலாந்தில் கல்வி பயின்ற இவ்விமான அதிகாரி றோயல் விமானப்படையிற் சேர்ந்திருந்தார். மிஸ்றர். டி. கிரெட்சர் கனடாவிற் பயிற்சிபெற்றபின் விமானியானார். பதவியுயர்வளிக்கப்பட்ட சொற்ப காலத்துக்குள் இவர் மரணமானார். இவரது தாயாரான ஸ்ரீமதி. ஸி. பி. டி. கிரெட்சர் சில மாதங்களுக்கு முன் மரணமானார்.

# உலகம்பலவிதக் கதை

(முற்றொடர்)

## ஆயுள் பெலமானதோ?

கணவன் கடிதத்தைப் படித்துக்கொண்டுபோக, மனைவியுந் துயர்க்கடலுளானாள்; என் செய்வாள் பாவம்! ஏகபுத்திரன்; அவனுக்கு இன்னுஞ் சிலவருடஞ் செல்ல ஆபத்து நேருமென்று நம்பினால் பெற்ற தாயின் மனம் என்ன பாடுபடும்! 'நாங்கள் செய்தது குறைத்தவமோ! குழந்தையின் பொருட்டு வரங்கேட்கப் போனவிடத்துக் கொண்டானையும் பறிகொடுக்க நேர்ந்தவள்போல், என் பிள்ளைக்குக் கல்யாணஞ்செய்ய யோசிக்கத் தொடங்கிய சமயத்தில், அவனுடைய ஆயுளையிட்டுச் சஞ்சலப்படவேண்டியிருக்கிறதே; ஆ! தெய்வமே! இதுவும் உன் சோதனையா? என் பிள்ளைக்குக் கல்யாணமும் வேண்டாம் வேறொன்றும் வேண்டாம், என் கண்மணி உயிரோடு மாத்திரம் இருந்தாற் போதும்" எனச் சண்பகத்தம்மாள் சொல்லிச் சஞ்சலப்பட்டாளாய்த் தன் கணவன் முகத்தைப் பார்த்து வருந்தி நின்றாள்; முருகேசபிள்ளை தாம் அகத்தே வருந்தினாரேனும் புறத்தே தம் துயரைக் காட்டாதவராய்த் தம் மனையாளைநோக்கி "ஏ, பைத்தியமே, நடவாததொன்றையிட்டு நடக்குமென்று முந்தியே யெண்ணி ஏன் கவலைப்படுகிறாய்? எவனோ ஒரு கைரேகை பார்க்குஞ் சாத்திரி ஏதோ எழுதிவிட்டானும், அவன் எழுதியதை எங்கள் பிள்ளை அனுபவமற்றவனானபடியால் நம்பிக்கொண்டான்; அதனைத் தன் சிறுபிள்ளைப் புத்தியால் இங்கே எங்களுக்கு எழுதிவிட்டான்; அவைகளையெல்லாம் நிசமென்று நம்பி நீ வீணாக இடர்ப்படுகின்றாயே! எங்கள் மகனுடைய சாதகத்தை எத்தனையோ சோதிடர்கள் எத்தனையோமுறை பார்த்துப் பலன் சொல்ல நீயும் நானும் கேட்டிருக்கிறோமே; எவராயினும் எக்காலத்தாயினும எங்கள் பிள்ளையின் சாதகத்தில் ஒரு கண்டமுண்டென்று சொல்ல நாம் கேட்டதில்லை; நீ வீணே துயரப்படவேண்டாம்; இந்த விஷயத்தை எவருக்கேனும் வெளியிடவும் வேண்டாம்; நான் இப்பொழுதே எங்கள் புரோகித ஐயரைக கூப்பிடுவித்துப் பிள்ளையின் சாதகத்தைக் கொடுத்து அவதானமாகப் பார்ப்பிக்கிறேன்; அவரும் அப்படியேதும் அபாயமான காலமென்று சொன்னால் அதன் பின்னர்த் தெய்வத்திற்குச் செய்ய வேண்டிய பிரீதிகளைக் கிரக சாந்திகளைச செய்விப்போம், ஆனதால் இப்பொழுது ஒன்றுக்குங் கவலைப்படாதே" என்று தம் மனைவியைத் தேற்றிவிட்டு, அவர் உடனே தம் மோட்டாரதச் சாரதியைக் கூப்பிட்டுப் புரோகிதரை அழைத்து வரும்படி சொல்லியனுப்பினார். சற்றுநேரத்திற் புரோகிதரும் அங்கே வந்து சேர்ந்தார்; மகனுடைய சாதகக்குறிப்பை ஆறுதலாய் அவதானமாய்ப் பார்த்துப் பலன் சொல்லும்படி அவர் கொடுக்கப் புரோகிதர் வாங்கி நீடித்தநேரமாகக் கணித்துப் பார்ப்பாராயினர். அவர் பார்த்தபின் முருகேசபிள்ளையையும் பக்கலில் நின்ற சண்பகத்தம்மாளையும் நோக்கி "இப்பொழுது இச்சாதகருக்கு நன்மையான காலம், வியாழ சுபமுண்டு, இன்னுஞ் சில மாசங்கட்கிடையில் இவருக்கு மங்கல கருமம் நடந்தேதீரவேண்டுமென்ற பலனிருக்கிறது. கல்வியிலும் தேர்ச்சி சித்தியடைய வேண்டியகாலம் இதுதான்; இவருடைய சாதகம் பின்னடிக்குப் பெரும் நன்மையான பலன் செய்யுமென்று நான் முன்னர்ப் பல முறை உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன்; இன்னும் விசேஷமாக நான் பார்த்துச் சொல்லவேண்டியது ஏது மிருந்தால் தெரியுங்கள் பார்த்துச் சொல்லிவிடுகிறேன்" என்று சொன்னார். "தம்பியினுடைய ஆயுள் பெலமானதோ என்பதை ஐயா, தயவுசெய்து ஒருகால் நல்லாய்ப் பார்த்துச் சொல்லுங்கள்" என்று சோதிடரை ஆவலோடு கேட்டாள் சண்பகத்தம்மாள். "ஆயுளைப்பற்றி யென்ன ஆட்சேபம்; இச்சாதகருக்குத் தான் பூரண ஆயுளுண்டென்று முந்தியே உங்களுக்கு நான் சொல்லியிருக்கிறேனே; ஆனாலும் நீங்கள் அழுத்திக் கேட்பதால் இன்னுமொருமுறை அவதானமாகப் பார்த்துச் சொல்லிவிடுகிறேன்" எனக் கூறிவிட்டுப் புரோகிதர் பின்னரும் சிறிதுநேரம் ஏதோவெல்லாம் எண்ணிக் கணக்கிட்டுப் பார்த்தார்; அங்ஙனம் பார்த்துக்கொண்டிருந்த சோதிடர் முகத்திலே சடுதியில் ஒரு மாறுபாடு உண்டானதைக் கணவனும் மனைவியும் அவதானித்தனர்.

## "உள்ளதை உள்ளபடி சொல்லுங்கள்"

"ஐயா, எங்களுக்கு எதனையும் ஒளிக்கவேண்டாம், உள்ளதை உள்ளபடி சொல்லுங்கள்; எது நடக்கவேண்டுமோ அது நடந்தே தீரும்; சோதிடர்களென்றிருக்கும் உங்கள் சொல்லை நம்பித்தான் நாங்கள் நடந்துகொள்வது" என்று முருகேசபிள்ளை கவலையுடன் சொன்னார். "அப்படி அதிகம் பயப்படவேண்டிய தொன்றுமில்லை; ஆனாலும் இன்னும் ஐந்து வருடத்தால் இச்சாதகருக்குக் கஷ்டகாலமுண்டென்று சொல்ல இடமிருக்கிறது" என நெட்டுயிர்ப்போடு கூறினார் சோதிடர். "ஐயா, சாமி, நீங்கள் பயப்படாமற் சொல்லுங்கள் உள்ள பலனை; நாங்கள் அதற்காகவேண்டிய கிரக சாந்தி தெய்வவந்தனை வழிபாடு எவைகளோ அவைகளையெல்லாஞ் செய்விக்கிறோம்" என்று மனத்துடிப்புடன் கூறினாள் சண்பகத்தம்மாள். "தங்கைச்சி, அப்படியதிகம் பயப்படத் தேவையில்லை; தெய்வ பிரார்த்தனை நிச்சயமாக வேண்டுந்தான்; இன்னும் இந்த விஷயத்திலே தாய் தகப்பனாகிய உங்களிருவருடைய சாதகங்களையும் இப்பொழுது எடுத்துக்கொண்டு வந்து தாருங்கள்; அந்தச் சாதகங்களின் பலனையும் பார்த்துவிட்டு ஏதும் விசேஷமிருந்தாற் சொல்லுகிறேன்" எனலும் சண்பகத்தம்மாள் உடனே அவ்விரு சாதகங்களையும் எடுத்துக்கொண்டுவந்து புரோகிதரிடங் கொடுத்தாள். அவர் அச்சாதகங்களை நீடித்தநேரம் வைத்து ஒன்றொன்றாகப் பார்த்தபின், அவ்விருவரையும் நோக்கி "உங்களிருவருக்கும் நீண்ட ஆயுளுண்டென்று சொல்ல இடமிருக்கிறது; உங்களுடைய அந்திய கடன்களையும உங்கள் பிள்ளையே செய்யவேண்டிய பலனுஞ் சொல்லப்படுகிறது; ஆனதால் உங்கள் மகனுக்கு நேரக்கூடிய கஷ்டகாலத்தில உயிரைப் பற்றிப் பயப்பட நியாயமில்லை; எதற்குந் தெய்வத்தையே வேண்டிக் கொள்ளுங்கள்; சோதிடர்களென்றிருக்கும் நாங்கள் திரிகால ஞானிகளல்லேரம்; எங்கள் சோதிட நூல்களைக் கொண்டும் அநுபவத்தைக் கொண்டும் இயன்றவரை

தொடர்ச்சி 5-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யோக ஐயம் அறுப்பு

(இமயமலையைச் சார்ந்த ரிஷிகேசத்தில் அமைத்த 'ஆனந்தக்கூடிர்' என்னும் ஆசிரமத்தில் தவம் செய்யும் சிவானந்த சரசுவதி அடிகள், உலகெங்குமுள்ள யோகமாணவருக்குக் கடிதவாயிலாக, ஆங்கிலத்தில் அளித்த யோக போதனைகளுள் சில:-)

திரு. வ. கந்தையா, மொழிபெயர்ப்பு.

வினா. தியானம் பிராணாயாமத்திலும் உயர்ந்தது என்று சொல்லுகின்றீர்கள், அடிகாள்! தியானம் எங்ஙனம் செய்யவேண்டுமென்று சொல்லியருளுக. தியானத்தில் நான் யாது நினைக்கவேண்டும்? எதனை நான் மனத்தில் படம்பிடிக்கவேண்டும்? துவங்கும் வகையறியேன். பல இந்திய துறவிகளைக் கண்டு கேட்கும்போது, இது செய், அதுசெய்யென்று சொல்லுகிறார்களேயல்லாமல் நான் அவற்றை எப்படிச் செய்வதென்று சொல்லுகிறார்களில்லை. ஆனதினால்தான் குறித்துச் சொல்லும்படி வினவுகின்றேன்,

விடை. நின் மனத்தில் நின் இட்டதேவதையின் உருவத்தைப் படம் பிடிக்கலாம். அந்த இட்ட தெய்வம் பிள்ளையாரோ முருகனோ, சிவனோ, யேசுவோ, புத்தரோ யாராயினும் ஆகட்டும். படம் பிடித்தபின் அத்தெய்வத்தின் நித்திய குணங்களாகிய தூய்மை, நிலைறவு, அருள், அன்பு, முழு ஆற்றலுடைமை, முற்றறிவுடைமை முதலியவற்றை உள்ளுக.

வினா. எந்நேரங்களில் இப்பயிற்சி செய்யவேண்டும்?

விடை. காலை, மாலை, நடுயாமங்களில், விடியலில் 4 மணிக்கெழுந்து தியானத்தைத் தொடங்குக. ஒழுங்கான பயிற்சியால் மனம் அமைதியுறும். அது நின்னை இடர் செய்யாது. மாலை பொழுதுபடும் நேரம். சந்திகள் தியானத்திற்கு உவந்த காலம். இனி உறங்குமுன்னும் தியானத்தில் அமரவேண்டும்.

வினா. மனம் கடல்போல் கொந்தளித்துக்கொண்டிருக்கிறது. அதனை எவ்வாறு தணிக்கலாம்? பிராணாயாமம் செய்வதெப்படி?

விடை. பிராணாயாமத்தினால் தணிக்கலாம். முறை வருமாறு:- வலது மூக்குத்துளையை வலது பெருவிரலால் மூடிக்கொண்டு மூச்சை உள்ளிழுத்து வெளியேவிடுக, அவதிப்படாமல் ஆறுதலாகச் செய்க. பின் மற்றைத் துளையை மூடிக்கொண்டு இங்ஙனம் செய்க. மூச்சை உள்ளிருத்திக் கட்டுப்படுத்த வேண்டாம். இவ்வாறு 12 தடவை செய்தபின் இளைப்பாறுக. பின் 5 அல்லது 6 முறை நின் ஆற்றலுக்கேற்பச் செய்க. இது பிராணாயாமத்தில் முதல் பயிற்சி.

வினா. பிராணாயாமம் குண்டலினியை எழுப்புமா?

விடை. தடையின்றிப் பிராணாயாமம் குண்டலினியை எழுப்பும். தேவாரமும் தியானமுங்கூடக் குண்டலினியை எழுப்பும். வகுத்த வண்ணம் யோக சாதனைகளைக் கையாளவேண்டும்; எனது "குண்டலி யோகம்" என்னும் நூலைப் பார்க்க.

வினா. இறைவன் பாவிகள்பால் அருள் செய்கின்றாரா?

விடை. ஆம்.

வினா. இறைவன் எங்கள் பாவங்களை மன்னிக்கின்றாரா அல்லது நாமே தண்டனையை ஏற்றுத் துன்பமுற்றுத் தீர்க்கவேண்டுமா?

விடை. தூய மனத்துடன் இரங்குபவனின் சிறிய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. ஆனால் மீண்டும் அவற்றைச் செய்யாதொழிக. பாவத்திற்கு இரங்குதலும் தானே தேடுந் தண்டனையாகும். அது சிறிய பாவங்களை அழிக்கும். பெரும் பாவங்களோ எனில் துன்பமுற்றுக் கழிக்கவேண்டியவை. செயலும் பிரதிச் செயலும், சமமும் நேர் மாறுமாம்.

வினா. நூல்கள் உதவிசெய்யும். ஆனால் அறிவோ தன்னுள்ளிருந்து வரவேண்டும். தங்கள் அபிப்பிராயமென்ன?

விடை. ஆம். ஆன்மாவைப்பற்றிய அறிவு இடைவிடாத் தியானத்தால் உள்ளிருந்து வருவது.

வினா. எச் சொற்கள் இறைவனைச் சேரும்?

நான் சொல்லுதற்குச் சில மந்திரம் தந்தருளுக.

விடை. நின இதயதளத்திலிருந்து எழும் அருட்சொற்கள் யாவும், இறைவனிடம் ஒலி அலைகளாய்ப் போய் அடைகின்றன, நின் ஆவியை அருட்டி உடலை அரும்பச் செய்யும் இறைவனின் பெயரையோ, 'ஓம்' முதலிய தெய்வப்பான்மையுடைய சொல்லையோ அடிக்கடி சொல்லுக.

வினா. அடியேனைத்தங்கள் மாணவருள் ஒருவனாக ஏற்று குரு மந்திரம் தந்தருளுக. நான் சிவனை ஜபம் பண்ணித் தியானஞ்செய்து வருகிறேன். தங்கள் ஆணைப்படி என் வாழ்நாளைக் கழிக்கிறேன்.

விடை. சிவ மந்திரமாகிய 'ஓம் நமச்சிவாய' என்பதனை நாளும் 21,600 தரம் பயிலுக. மனத்தினால் சொல்லவேண்டும். சிவபெருமானின் படத்தை நின் தியான அறையில் அமைத்துக்கொள்க. அவரின் உருவத்தை நின் மனத்தில் எப்பொழுதும் பதித்துக்கொள்க. அவர் எங்கும் உளர் என்பதை உணருக. சிவமகிம்ன ஸ்தோத்திரத்தை மனப்பாடம் பண்ணுக. காலை 4 மணிக்கெழுந்து 6 மணிவரை எளிதான ஓர் இருக்கையிலிருந்து தியானஞ் செய்க. நாளும் நாட்குறிப்பொன்றை எழுதிவருக. பிரமச்சரியத்தைக் கடைப்பிடிக்க. நின் முன்னேற்றத்தைப்பற்றி மும்மாதங்களுக்கொருமுறை எழுதுக. கைலாயத் திருமலையில் திகழும் திரிசூல தாரியின் தவ்விய அருள் தலைபணிகிய நின் மீயல் விழட்டும்.

வினா. மனத்திற்கு இருப்பிடம் புருவமத்தியாகையால் மனத்தை அவ்விடத்திற்கு ஒருமுகப்படுத்துதல் சாலச்சிறந்தது என்படுகின்றது. நானும் அவ்விடத்தில் ஒருமுகப்படுத்தப் பார்த்தேன். ஆனால் இதயத்திற்கு ஒருமுகப்படுத்துதல் எளிதாகின்றது.

விடை. ஒருமுகப்படுத்துதல் என்பது மனத்தை ஓர் இலக்கில் அல்லது ஒரு குறிக்கோளில் செலுத்துவது. அது தியானத்திற்கு முந்தியபடி. ஒருமுகப்படுத்திய பின்னர் வருவது தியானம், ஒருமுகப்பாடு இல்லாமல் தியானம் இல்லை, இதயத்துக்கு ஒருமுகப்படுத்துக.

வினா. ஜபம் என்றால் என்ன? ஜபத்திற்கும் தியானத்திற்கும் உள்ள வேற்றுமை என்ன? ஜபம் தியானத்தின் ஓர் உறுப்பா?

விடை. ஜபம் என்பது இறைவனின் பெயர்களை இடைவிடாது சொல்லுதல். தியானம் என்பது, உலக எண்ணங்கள் யாவும் அகலவுற, கடவுள்தன்மையூறிய ஒரே எண்ணத்தைக் கொள்ளுதல். "ஓம், நமச்சிவாய" [illegible] நைப்பயிலு[illegible] இடைவிடாது சொல்லுதல்] சிவபெருமானின் சிலையை மனக்கண்ணுடியில் காண்பது உருவத்தியானம். அப்பெருமானின் குணங்களை நினைத்தல் உருவமின்றிய தியானம். ஜபம் தியானத்தின் ஓர் உறுப்பு. ஒரு முக்கிய உறுப்பு, ஜபம் தியானத்தில் முடியும். இராமதாசர், துளசிதாசர், துக்காராமர், சைவ [illegible] பத்தர்கள் சமா[illegible] மூலம்.

# இரணியன்

திருமயிலை, திருவாளர் சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை

இரணியன் சூரபன்மனின் புதல்வருள் ஒருவன். வேதங்களை ஓதியுணர்ந்தவன். அரக்கர் குலத்திற் பிறந்தும் நல்லறமுடையோன். அவன் தனது தந்தையாகிய சூரபன்மனுக்குச் சுப்பிரமணியப்பெருமானின் புகழினை எடுத்துக் கூறி அவரோடு போர்புரிதல் அடாது என்று பலவகையாலும் தடுத்தான். "மூர்க்கனும் முதலையுங் கொண்டது விடா" என்ற பழமொழிக் கிணங்க அவன் நற்புத்தி சூரபன்மனுக்கு நாராசம் போன்றிருந்தது. இரணியன் எடுத்துக்கூறிய நீதிகளாவன:

1 ஏதேனும் ஒருதவி செய்தவர்களின் மனம் புழுங்கும்படி பெற்றவர் செய்தால் முன் செய்த நன்றியே அவரைக் கொல்லும்.

"எந்நன்றி கொன்றார்க்கு
 உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

2 கந்தப் பெருமானின் தாதையாகிய சிவபெருமானாது ஆணையை மீறி நடந்தவ ரெவரும் உய்வதில்லையென்பது பின்வரும் பராக்கிரமங்களால் அறியலாம்.

(A) காமதகனம்
(B) திரிபுர மெரித்தல்
(C) அந்தகாசுரமர்த்தனம்
(D) யமனை உதைத்தது
(E) கங்கையைத் தரித்தது
(F) ஆலமுண்டது
(G) தக்கன் வேள்வியை அழித்தது.
(H) பிரமன் சிரங் கொய்தது
(I) யானையை உரித்தது
(J) புலியை உரித்தது
(K) பன்றியின் கொம்பைத் தரித்தது
(L) ஆமையோட்டை அணிந்தது
(M) முயலகன் முதுகை ஒடித்தது

இத்தகைய வீரபராக்கிரமமுடைய சிவபெருமானைச் சரணமடைவோர் பிழைப்பவராவர். அவரை எதிப்பவர் மாய்வர். இது வேத நூற்றுணிபாகும். எங்கேனும் தன்னினும் உயர்ந்தவரோடு சண்டையிட்டுச் சயம் பெறுவது உலகவழக்காமோ என்று இடித்துக் கூறினன்.

"அறுமுகத் தொருவனுக்
 கமலனை யான் பால வந்த
சிறுவ னென்றிகழல் மன்ன
 செய்கையாற் பெரியன்"

என்று குமரவேள் பாலனாயினும் வன்மையிற் பெரியன் எனக் கூறியதோடு தாரகன் அவரால் மாண்டதையும் எடுத்து இயம்பினான்:

"விதித்திறனை யாவரே
 வன்மையால் வென்றார்"
"மெய்வகை விதியை யாரே
 வென்றவர்"
"மேலையின விதியை யார்
 வெல்லுநீரினர்"

என்றவைக் கேற்ப அவனுக்கு இறுதியாகிய பருவம் வந்தணுகியதால் இரணியனைப் பலவாறு வைது மருட்டினான். இவனுக்கு உறுதி யாம் பல கூறின் என்ன பயன் என்று யோசித்துத் தான் பிழைபடச் சொன்னவற்றைப் பொறுத்துக் கொள்ளும்படி வேண்டிப் போர்க்குச் செல்வதாகப் புறப்பட்டான். போர்க்களத்தில் அவனுக்குப் பின்வரும் எண்ணங்கள் உதித்தன:

"தந்தையாரு மிறத்தல் சரதமே"
"உற்றளோரு மிறப்பரி
 துண்மையே"
"மைந்தனைப் பெறுகின்றது
 மாசிலாப்
புந்தியன்பொடு போற்றி
 வளர்ப்பதுந்
தந்தை மாண்டுழித் தம்முறைக்
 கேற்றிட
அந்த மில்கட னாற்றுதற்கே
 யன்றோ"

அவற்றால் தாக்குண்டவனுய்த் தன்னுயிரைக் காக்கும் பொருட்டு மீனுருவெடுத்துக் கடலில் ஒளித்திருந்து பிறகு ஈமக் கடனை முடித்தான். இவன் புகட்டிய நற்போதனையைச் சூரபன்மன் பின்னர் உணர்ந்தானேயாயினும் 'தடுத்தது மான மொன்றே' என்றபடி தற்போதத்தால் மாயை வயப்பட்டானா. இது பின்வருஞ் செய்யுளாற் காணக்கிடக்கின்றது:-

இங்கென துயிர்போ லுற்ற
 இளவலு மினைய சேயுஞ்
செங்கையில் வேலோன தன்னைச்
 சிறுவ னென்று எண்ணல
 கண்டாய்
பங்கயன் முதலோர் காணப்
 பரமனே யாகு மென்றார்
அங்கவர் மொழிந்த வாறுஞ்
 சரதமேயான தன்றே

சூரபன்மனுக்கு இரணியனே யன்றிச் சிங்கமுகனும் பானுகோபனும் நற்புத்தி புகட்டினர். அவன் அவர்கள் கூற்றை மதித்திலன். தன் தவ வன்மையால் பெற்ற வரத்தையே பெரிதாக மதித்து மதி மயங்கினான். சிங்கமுகன் புரிந்த போதனைகள் சூரன் அமைச்சியற் படலத்தில் நனகு தெரிக்கப்பட்டுள்ளன. அவற்றைப் பின்னர் ஆராய்வாம்.


## அடைவுநகை ஏல விற்பனவு

1941ம் ஆண்டு தைமாசம் 18ம் திகதி தொடக்கல் 1942ம் ஆண்டு பங்குனி௴ 22ம் திகதி முடிய கோண்டாவில் கிழக்கு லைசென்சுபெற்று அடைவுபிடிக்கும் சி. நவரத்தின மென்பவரிடம் அடைவு வைக்கப்பட்ட நகைகள் இப்போது தவணைதப்பியபடியால் சட்டப்பிரகாரம் 1943ம் ஆண்டு புரட்டாதி மாசம் 25ந் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு எடுபட்ட நகை பிறநீங்கலாக மிகுதி மேற்படியார் வீட்டில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

க. பொன்னப்பா
இணுவில் வெந்தீஸ்மேஸ்தர்
7—9—43 கொமிஷனர்

Mis 118 9.9.43.

## வாடகைக்கு

ஓட்டுமடம் புன்னாலை ரேட்டு 248ம் நம்பர் வீடு 9 பரப்பு வளவு. தென்னை, மா நிறைய உள்ளது. நல்ல நீர்க் கிணறும் பல அறைகளும்.

S. Rajaratnam,
Jail Hospital,
Anuradhapura.

(Mis. 114 9-9-43)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்ணுமலேச் சர்வகலாசாலை

## ஈழநாட்டு இளைஞர் கழகம்

### 1943—1944 ஆண்டுகட்குரிய தொடக்கவிழா

இக்கழகத் திறப்புவிழா 1943ம்ஆ ஆவணிமீ 23.8.43 திங்கட்கிழமை மாலை 6 மணியளவில் உயர்திரு. M. இரத்தினசாமி அவர்கள் M. A., (Cantab) Bat-at-law C. L. E. (வைஸ்சான்சலர்) தலைமையில் ஆரம்பமாயது. அன்றுமாலை 6 மணி தொடக்கம் 6½ மணி வரையும் கழக அங்கத்தினர்களும், ஏனைய விருந்தினர்களும் உட்பட சுமார் 75, 80 நபர்கள் தேநீர் விருந்திற் கலந்துகொண்டார்கள்.

மாலை 6½ மணியளவில் மேற்படி கலாசாலைக் கோகலே மன்றத்தில் இக்கூட்டம் ஆரம்பமாயது. சங்கீதபூஷணம் திரு சி. விஞசித்தம்பி அவர்களால் முதல் கடவுள் வணக்கம் இன்னிசையுடன் பாடப்பெற்றது. இரண்டாவதாகத் தலைவர் கி. இலக்குமண ஐயர் அவர்களால் கழகத்தின் வரலாற்றையும், நோக்கத்தையும், சபையோருக்கு விளக்கிப் பெருந்தலைவர் அவர்களையும், அன்றைய தொடக்கவுரையாளர் பண்டித. லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்களையும், விரிவுரையாளர் வித்துவான். ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை அவர்களையும் சபையோரையும் வரவேற்றுர்.

பின்பு அன்றைய தலைவர் (வைஸ்சான்சலர்) அவர்கள் முன்னுரையாகப் பலபேசி இலங்கைமாணவர்கள் பலர் இயல் இசைக் கலைகளில் மாத்திரமன்றி இன்னும் ஏனைய கலைப்பகுதிகளிலும் வந்து சேர்ந்து படித்து இந்திய இலங்கை மாணவர்க்கிடையே நெருங்கிய தொடர்பையும், ஒற்றுமையையும், சகோதரத்துவத்தையும் ஏற்படுத்த வேண்டு மென்பதை வற்புறுத்திக் கூறினுர்.

அடுத்ததாக, பண்டித லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்கள் தமது தொடக்கவுரையை மிகவுந் திறம்படக் கூறினுர். அதில் தான் இலங்கையில் ஓர் மாணவனுக இருந்ததைப்பற்றியும், இப்போ யாழ்ப்பாணநகரில் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் பரீக்ஷகராகத் தாம் இருப்பதைப்பற்றியும் அதன் காரணமாகத் தமக்கு யாழ்ப்பாணத்தோடு நெருங்கிய தொடர்பு இருக்கிற தென்றும் மிகவும் அன்போடு போற்றிப் புகழ்ந்து பேசினுர். பின் "தமிழ் இலக்கியச் சுவை" என்ற பொருள்படத் தமது சொற்பொழிவை ஆற்றிக் கழகத் திறப்புரையை இனிது நிறைவேற்றி வைத்தார்.

அதன் பின்பு வித்துவான் ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை அவர்களது 'செஞ்சொற்கவியின்பம்' என்னும் பொருள்பற்றிய பேச்சு நிகழ்ந்தது. அவருடைய ஹாஸ்ய நடை, இனிமையான பண்ணோடு இயைந்த வசனம் சபையோர் அனைவரையும் மெய்மறக்கச்செய்துவிட்டது.

ஈற்றில் பெருந்தலைவர் அவர்களது நிறைவுரையோடும் அமைச்சரின் நன்றியுரையோடும் கூட்டம் இனிது நிறைவேறியது.

அண்ணுமலைச் சர்வகலாசாலை
ஈழநாட்டு இளைஞர் கழக
நிருவாகசபை அங்கத்தினர்கள்

பெருந்தலைவர்:- உயர்திரு. M. இரத்தினசாமி அவர்கள் M. A. (Cantab) Bar-at-Law C. I. E.(வைஸ்சான்சலர்) துணைப்பெருந்தலைவர்:- உயர்திரு. பல்கலைப்புலவர்: கா. சுப்பிரமணியபிள்ளை அவர்கள் M. A. M. L., தமிழ்ப்பேராசிரியர். கௌரவ அங்கத்தினர்கள்:- 1 டாக்டர். குறியன் ரசாயனப் பேராசிரியர் அவர்கள் 2 டாக்டர் A. சிதம்பரநாதன் செட்டியார் M. A, தமிழ் விரிவுரையாளர் அவர்கள் 3 திரு. C. ஸ்ரீநிவாசாச்சாரியார் M. A. சரித்திரப்பேராசிரியர் அவர்கள். 4 கலாநிதி திரு. K. பொன்னையாபிள்ளை சங்கீதப் பேராசிரியர் அவர்கள். 5 சங்கீத பூஷணம் திரு. சி. விஞசித்தம்பி அவர்கள். தலைவர்:-K. இலக்குமண ஐயர் V. B. A. (Hons) அமைச்சர்:- சங்கீத பூஷணம் P. சந்திரசேகரம் Ceylon Govt. Music Scholar) உதவி அமைச்சர்:- S. ஆறுமுகம். வித்துவான் 1வது ஆண்டு தனதிகாரி சங்கீத பூஷணம் K. S. பாலசுப்பிரமணிய ஐயர் (CeylonhGovt. Music Scholar) காரியக் குழுவினர் 1 நா. சிவபாதசுந்தரம் வித்துவான் 2வது ஆண்டு 2 கணபதிப்பிள்ளை வித்துவான் 1வது ஆண்டு 3 A. சோமசுந்தரம் Inter I

4 S. செல்வத்துரை சங்கீதம் 3வது ஆண்டு 5 N. சண்முகசுந்தரம் சங்கீதம் 2வது ஆண்டு 6 S. சோமசுந்தரம் சங்கீதம் 1வது ஆண்டு 7 N. பத்மாவதி சங்கீதம் 3வது ஆண்டு 8 S. சரஸ்வதி சங்கீதம் 4 வது ஆண்டு.

இங்ஙனம்
பே. சந்திரசேகரம்
அமைச்சர்

## கடிதம்

### ஆசௌசதீபிகை

ஆசௌச தீபிகை வடமொழி தென்மொழி யென்னு மிருமொழியினு முள்ளது. வடமொழியிலுள்ளதி சைவ, என்னும் விசேடண அடையை முற்கொண்டு சைவாசௌசதீபிகை எனவும், தமிழ்மொழியிலுள்ளது அவ்வடையின்றி ஆசௌசதீபிகை எனவும், வழங்கப்பட்டு வருகின்றன. இவையிரண்டும் பாடையான் வேறுயினும் விடயத்தான் ஒன்றே.

வடமொழியிலுள்ளது சைவாகமங்களிலுள்ள ஆசௌச விதிகளை உலகினர்பொருட்டு ஆங்குள்ளவாறு எடுத்துத் திரட்டப்பட்டது. அவ்வாறு திரட்டினவர் சிதம்பரத் திருச்த வேதஞானமுனிவர்.

தமிழ்மொழியிலுள்ளது திருவாரூர் ஞானப்பிரகாச ரருள்பெற்ற மதுரைத் திருஞானசம்பந்த குரவர் சீடராகிய தமிழாகரர் என்பவரால் சிவாகமங்களி லுள்ளவாறே மொழிபெயர்த்துப் பாடப்பட்டது. இவ்விரண்டுநூலும் ஆசௌசவிதிவிகற்பங்களையெல்லாம மிகவுந் தெளிவாக விளங்கக் கூறுவனவாம்.

தீபாக்கினியானது இருளின் மறைப்புண்ட பொருள்களை அவ்விருளை நீக்கிக் காட்டுந் தன்மை போல அவ்ஞான விருளான் மறைப்புண்டிருக்கும் அசுவழுக்காகிய குற்றத்தை அவ்வஞ்ஞான விருளை பொருபாலொழுக்கி விளங்கக்காட்டுதலின் ஆசௌச தீபிகையென்பது அந்நூல்களுக்குக் காரணக் குறியேயாம். நங் கிளைத் தேயத்தவர்க்கு இவ்விரண்டு நூலுமே ஆசௌசானுட்டானத்திற்கு விதிநூல்களாக விருக்கின்றன. சிறுபான்மை அக நிர்ணயம் கொளவாருமுளர். மற்றொரு நூலும் நம்தேயத்து இவ்விஷயத்திற பயனபடுவனவல்ல. ஆதலின் நம்தேயத்தவரில் இவ்விஷயங் காரணமாக வழுக்காணபவர் குறிக்கப்பட்ட விதநூல்களைக் கொணடு காண்பதே தகுதி. அலலாதது பயனில் செய்கையே.

இங்ஙனம்,
வி. ஏகாம்பரநாதன்.


# பல் வைத்தியம்

## யாழ்ப்பாணம்

பல் வைத்தியம் செய்யவும் கண் பரிசோதனை செய்யவும் தத்துவம்பெற்றவரான திரு. எஸ். சாள்ஸ் பத்திருன அவர்கள் வருஷத்தின் எல்லா மாசங்களிலும் 3-ந் திகதி தொடக்கம் 15-ந் திகதிவரையும் யாழ்ப்பாணம், பெரிய தெரு 43ம் இலக்கத்திலுள்ள வைத்திய சாலையில் கருமம் நடாத்துவார்.

## குருநாகல் கிளைஸ்தாபனம்

மாசத்தின் 20ந் திகதியிலிருந்து 30-ந் திகதி வரையும் குருநாகல் கோட்டுவீட்டுக்கு முன்னுள்ள பல்வைத்திய கிளைஸ்தாபனத்தில் கருமம் நடாத்துவார்.

யாழ்ப்பாணத்தில் அவரிடம் வைத்தியம் செய்விப்போர் முன் ஒழுங்குகள் செய்யவேண்டில் அவருடைய குருநாகல் விலாசத்துக்கு எழுதுதல் நல்லது.

(Mis. 98. 5.8—31.12.43)


## நாகப் பிரதிஷ்டையின் தத்துவார்த்தம்

(முற்றொடர்)

பிரம்மஸ்ரீ ச. பொன்னுஸ்வாமிக் குருக்கள்

"நியமலட்சணமு மியமலட்சணமும்
ஆச னுதிவித பேதமும்
நெடி துணர்ந்திதய பத்மபீடமிசை
நின்றிலங்கு மஜபாநலத்
தியலறிந்து வளர் மூலகுண்டலியை
இனிதிறைஞ்சியவ ளருளினுல்
எல்லை யற்றுவளர்சோதி மூலவனல்
எங்கண் மோன
மது முறையிலே
பயமிகுத்துவரு மமிர்த மண்டல
மதிக்குளே மதியை
வைத்துநான்
வாய்மடுத்தமிர்த வாரியைப் பருகி
மன்னு மாரமிர்த வடிவமாய்ச்
செயமிகுந்து வருசித்த யோகநிலை
பெற்றுஞான நெறி
யடைவனே
தெரிவதற்கரிய பிரமமே யமல
சிற்சுகோதய விலாசமே"

என்னும் பிரமாணப்படி நியம இலட்சண முதலியவற்றைத் தேர்ந்து அசுபையின் தன்மையையறிந்து குண்டலி சக்தியை வணங்கி, அவளருளினுல் சந்திர மண்டலத்தின் அமுதத்தைப்பருகி, அமுத வுருவமாகி யோக நிலையையடைந்து அதன் வழியாக ஞான மார்க்கத்தை அடைதல் வேண்டுமென்பது நன்குயறியக் கிடக்கின்றது.

இந்தச் சக்தியானது வட்டவடிவமாகப் பிராணவாயுவினுல் அசையாமலிருக்குந் தன்மை யுள்ளது, ஆகையினுல பிராணவாயுவைச் சுழிமுனையில நிறுத்தி மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்னும் ஆறுதாரங்களின்பதமங்களுக்சரங்களை அறிந்து தியானித்துக் குண்டலி சக்தியை விழிப்பித்தல் வேண்டும். இப்படி விழிப்பிக்காது செய்யும் சகல யோக உபாயங்களும் நிஷ்பலமாகும். இக்குண்டலி சக்தியானது யோகிகளுக்கு மோட்சத்தின் பொருட்டும், சாமானியர்களுக்குப் பந்தத்தின் பொருட்டுந் தூங்குகின்றது.

சாமானிய மனுஷன் தன்னிடத்தில் மூலாதாரத்தில் தூங்கும் குண்டலி சக்தியை இருப்பதாகக் கூட அவன் அறியமாட்டான்.

இந்தக் குண்டலி சக்தியானது மூலாதார சக்கரத்தில் சர்பபம் போன்று மூன்றரை வளைய ரூபமாகத் தூங்கிக் கொண்டிருப்பதாகவும், யோகாப்பியாசத்தால எழுப்பப் பட்டு மேலே சுஷும் நாமார்க்கமாகக் கிளம்பி ஆறு சக்கரங்களையும் பிரம, விஷ்ணு, ருத்ர கிரந்திகளையும் அக்நி, சூரிய, சந்திர மண்டலங்களையும், பேதனஞ் செய்து மேலே சஹஸ்ராரபதும மெனனும் இடத்திற்குப் போய் அங்கே அந்தப் பதமத்தின் நடுவிடமாகிய சந்திர மண்டலத்தி லிருக்கும் அமிர்தத்தைப் பெருகச் செய்து திரும்பவும் அதே வழியாகத் தன்னிருப்பிடமாகிய மூலாதாரத்திற்கு வந்து முன் போலவே யிருக்கும். யோகாப்பியாச மில்லாதவர்களும் தங்களுடைய பாவனையின் உறுதியால இந்த அனுபவத்தை யடையலாம்.

எனவே, சாதாரண மனிதன் மூலாதாரத்தின்கண் தூங்குங் குண்டலி சக்தி இருக்கிறதாக அறிய மாட்டான். யோகிகளதான் நன்கு அறிவார்கள். அப்படித் தூங்குந் தன்மையை அவன் அறியாமலிருப்பது உத்தமமாம். அவன் தக்க நற்குணம், சன்மார்க்க முறைகளைப் பற்றி நடக்கும் தன்மையைப் பெறும் வரையில அச்சக்தியை எழுப்பாமல விடுவதே நன்மை. குருமூலமா யறியாமல் இது சம்பந்தமான எவ்வகைப்பட்ட பரீட்சையையும் முற்றாய் நீக்குதல் வேண்டும். கிரமந்தப்பி எழுப்பி விட்டால் தாங்க முடியாத துன்பங்கள் வரும். பின அதை எவ்வகையாலும் அடக்க முடியா. இதுபற்றியன்றோ சாமானிய மனுஷர்கள் கருங்கல்லிலே தாங்கள் கண்டு தரிசித்துக் கொள்வதற்கே சர்ப்ப உருவத்தை யமைத்து [நாகப்பிரதிஷ்டை செய்து வழிபடுகின்றுர்கள்.

வரும்

## காரைநகர் வியாவிற் சைவ பரிபாலன வித்தியாசாலை

நிகழும் சுபானு ஆவணிமீ சவ (20-8-43) வெள்ளிக்கிழமை இரவு 7 மணியளவில் ஷை வித்தியாசாலையின் புதுக்கட்டிட (திருநாவுக்கரசு நாயனர் மண்டப)த்தின் பிரவேசதின வருடாந்தக்கொண்டாட்டம் ஷை வித்தியாசாலைப் பெற்றுர் சங்க அங்கத்தவருளொருவராகிய திருவாளர் அ. கந்தையா அவர்கள் தலைவராக விருப்பத் தேவார பாராயணத்துடன் ஆரம்பமாயது.

தலைவர் அவர்களால ஆரம்ப உபந்நியாசஞ் செய்யப்பெற்றதும், மாணவர்கள அப்பியாசங்களை நிகழ்த்திச் சபையோரை மகிழ்வடையச் செய்தனர். பின்னர் வித்தியாசாலை அதிபரவர்களால் தயாரிக்கப்பெற்ற வருடாந்த அறிக்கைப்பத்திரமும், வரவு செலவு அறிக்கையும் வாசிக்கப்பெற்று அங்கீகரிக்கப்பெற்றன.

அதன்பின், வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர் பண்டிதர் திரு. சு. இராமசாமி அவர்கள் "வித்தியாசாலையின் வருங்காலநிலை" என்னும் விஷயத்தைப்பீடிகையாகக்கொண்டு இவ் வித்தியாசாலையானது சென்ற சில வருடங்களாக வளர்ச்சியில் தளர்வுற்றிருந்ததாயினும், வருங்காலத்தில் வளர்ச்சியடைவதற்குரிய முறையில் செல்லுகின்றதென்றும், இவ் வருடத்தில் இருவர் கனிஷ்டதராதரப்பத்திரவகுப்பிலபரீட்சைக்குச் சென்று இருவரும சித்தியடைந்திருப்பது அதற்கு ஓர் அறிகுறியாகுமென்றும், பெற்றுரும் ஆசிரியரும ஒத்துழைத்துத் தொண்டாற்றி வருவார்களானுல், இவ் வித்தியாசாலையானது இக்கிராமத்தை அபிவிருத்தி செய்யும் ஓர் சிறந்த ஸ்தாபனமாகத் திகழுமென்றும் உபந்நியாசஞ் செய்தனர்.

இற்றில் திரு. க. தியாகராஜா அவாகளும், திரு. க. பரமநாதர் அவர்களும, அக்கிராசனர் அவர்களும் குறிப்புரைத்தனர். அதன்பின் வித்தியாசாலை அதிபர் அவர்கள் உபந்நியாசகர் அவர்கள் கூறியபிரகாரம் வித்தியாசாலை வளர்ச்சியடைவதற்கு, எம் வித்தியாசாலை அன்பர்கள் ஒவ்வொருவரையும் ஒத்துழைக்கும்படியாக விண்ணப்பித்துச் சபையோருக்கு நன்றி கூறினர். இரவு 9 மணியளவில் தேவார பாராயணத்துடன வருடாந்தக்கொண்டாட்டம் இனிது நிறைவேறியது.

"மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்"


# விளம்பரமின்றேல் பெரும்பணமில்லை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகம்பலவிதக்கதை

2ம் பக்கத் தோடர்ச்சி


யிற் சாதகங்களைக் கணித்துப்பலன் சொல்லுகிறோம்; எல்லாம் அந்தப் பெருமானுடைய திருவருளிலேயே தங்கியிருக்கின்றன; மேலும் நீங்கள் புண்ணியத்தோடு கூடியுள்ளீர்கள்; உங்களுக்கு ஏதும் போபத்து நேரக் கடவுள் விடமாட்டார்" என்று சொல்லித் தேற்றி, அவர்கள் கொடுத்த சன்மானத்தையும் பெற்றுக்கொண்டு புரோகிதர் போயினர். புரோகிதர்சொன்ன தேறுதல் வார்த்தைகளாற் புருஷனும் மனைவியும் ஒருவாறு தம் கவலை நீங்கப் பெற்றனர். தங்கள் மகனுக்கு மன ஆறுதலுக்கான ஒரு கடிதத்தை எழுதிவிடல் வேண்டுமென்று முருகேசபிள்ளை நிச்சயித்து அப்படியே எழுதிவிட்டார். ஆனால், தங்கள் மகனுக்கும் புவனேசுவரிக்கும் விவாகஞ்செய்யும் விஷயமாகச் சின்னம்மாளுக்கு என்ன சொல்வதென்றறியாதவளாய்த் தியங்கினாள் சண்பகத்தம்மாள். அவள் தன் கணவன் சிறிது ஆறுதலுடன் இருக்குஞ் சமயம் பார்த்து அவரிடம்போய் "இங்கே பாருங்கள், எத்தனை நாளுக்கு நாங்கள் இந்த இரகசியத்தைச் சின்னம்மாளுக்கும் பிள்ளைகளுக்கும் வெளியிடாமலிருப்பது? அவர்களெனிலோ எதற்கும் எங்களையே நம்பி எதிர்பார்த்த வண்ணமிருக்கிறார்கள்; நாங்கள் அவர்களுக்கு ஆம் அல்ல என்பதில் ஒன்றைச் சொல்லித்தானே விடவேண்டும்" என்று கவலைகூரச் சொன்னாள். "ஆம், நம்பி நடப்பவர்களுக்கு நாம் எதனையும் மறைத்து வைத்திருக்க வொண்ணாது; மெல்ல மெல்ல உண்மையை வெளியிடவேண்டியதுதான்; இன்னும் இரண்டுமாசத்துள் எங்கள் மகன் இங்கு வந்துவிடுவானல்லனோ, அதன் பின் இவைகளையிட்டு மகனோடும் யோசித்து அவர்களுக்கு ஒரு முற்றுச் சொல்வதுதான் நல்லது" என்று முருகேசபிள்ளை சொல்லித் தம் மனையாள் மனத்தைச் சமாதானப் படுத்தினார்.

### தம்பியின் கடிதம் வரவில்லையோ?

இவை இங்ஙனமாக, காஞ்சனமாலை ஒருநாட் பிற்பகல் தன் தாயைப் பார்த்து "அம்மா, நாங்கள் எங்கள் சின்னம்மா ஆச்சி வீட்டிற்குப் போய்ப் பலநாட்களாயின; நாங்கள் போகாமையையிட்டு அவர்கள் கவலைப்படுவார்கள்; இன்றைக்குப் பின்னேரம் எங்கள் ஐயாவுக்குச் சொல்லிவிட்டு நீங்களும் நானும் அங்கேபோய் வருவோமா" என்று ஆவலுடன் கேட்டாள். மகள் இப்படிச் சொல்லக் கேட்ட தாய், மனந் திடுக்குற்றாள்; ஆனால் அந்த வீட்டிற்குச் சிலநாட்களாகப் போகாமல் விட்டதற்குக் காரணத்தைத் தன் மகளுக்கு வெளியிடமுடியாளாய் யோசித்தாள். "கண்ணே காஞ்சனம், நாங்கள் தங்கள் வீட்டிற்கு வெகுநாளாய்ப் போகாததையிட்டுச் சின்னம்மாளும் மக்களும் கவலைப்படுவார்கள், போகத்தான் வேண்டும். நீ ஐயாவிடம் போய் உன்னுடைய நோக்கத்தை ஐயாவுக்குத் தெரிவி" என்று சொல்ல, உடனே மகள் தலைவாசற்புறத்திருந்த தகப்பனிடம் போய் விஷயத்தைச் சொன்னாள். "மகளே, உனக்கு விருப்பமானால் உங்கள் அம்மாவையுங் கூட்டிக்கொண்டு அங்கே போய்வாருங்கள்" என்று சொல்ல, மகள் சந்தோஷத்துடன் மீண்டு வந்து அச்செய்தியைத் தாயிடந் தெரிவித்தாள். தாய் "நல்லது" என்று சொல்லிவிட்டுக் கணவனிருக்குமிடத்திற்குத் தனியே சென்று "சம்பந்தவிஷயமாக அவர்கள் எதுங் கேட்டால் என்னபதில் சொல்வது" என்று கவலையோடு கேட்டாள்; "சொல்வதென்ன, உண்மையைத்தான் சொல்லவேண்டும்" என்றார் முருகேசபிள்ளை; தாயும் மகளும் உடனே புறப்பட்டுச் சின்னம்மாள் வீடுவந்து சேர்ந்தனர். அவர்கள் வரவைப் பலநாட்களாக எதிர்பார்த்திருந்த சின்னம்மாளும் பிள்ளைகளும் உடனே எழுந்து சென்று உபசரித்துக்கொண்டு வந்து இருத்தினர். பலநாட்களாகத் தம் வீட்டிற்கு அவர்கள் வராமல் விட்டதைச் சின்னம்மாள் சொல்லிக் கவலைப்பட, சண்பகத்தம்மாள் ஏதோ சமாதானஞ் சொல்லித் தேற்றினாள். காஞ்சனமும் புவனேசுவரியும் வேறிடத்திற் போய் வார்த்தையாடிக் கொண்டிருந்தனர். சின்னம்மாள் சண்பகத்தம்மாளைச் சுகம் விசாரித்தபின் "தம்பியின் கடிதம் இந்தநாட்களில் வரவில்லையோ" என்று வினவினாள். வினவிய மாத்திரத்தே சண்பகத்தம்மாளின் முகம் முன்னிருந்த மலர்ச்சி நீங்கி மாறுபட்டது; அவளுடைய கண்களில் நீர் ததும்பியது; இவற்றைப் பார்த்துக்கொண்டிருந்த சின்னம்மாள் அஞ்சினாள்; சஞ்சலமுற்றாள்; "தங்கைச்சி, ஏன் கவலைப்படுகிறீர், எதனையும் ஒளியாமல் எனக்குச் சொல்லலாமே; இந்தச் சம்பந்தத்தில் உங்கள் மகனுக்கு இஷ்டமில்லாவிட்டால், அவர் விருப்பத்தின்படி நீங்கள் வேறெங்கேனும் கல்யாணஞ் செய்துவைக்கலாமே, அதற்குக் கனவிலும் நாங்கள் மாறாக நிற்கமாட்டோமே, கல்யாணமும் தாம் தாம் நினைத்தபடி நடக்குங் கருமமா? அது விதி வழியல்லவோ நடப்பது: இதனையிட்டா கவலைப்படுகிறீர்கள்; நீங்கள் எங்களுக்குச் செய்த நன்மைகளை நாங்கள் சீவனுள்ளவரையில் மறத்தலும் முடியாது, உங்களைப் பிரிந்திருத்தலும் முடியாது; உள்ளதைச் சொல்லும் தங்கைச்சி" என்று பரிபவத்தோடு சின்னம்மாள் கேட்டாள்; சண்பகத்தம்மாள் கண்ணீரைத் தன் முன்றானையால் துடைத்துவிட்டுத் தானே தன்னை ஒருவாறு தேற்றிப் பெருமூச்சுவிட்டு, சின்னம்மாளைப் பார்த்து "அக்கா, நாங்களாக, எங்கள் பிள்ளைகளாக உங்களை வெறுக்க, புறக்கணிக்க முடியுமா? என்பிள்ளை "சடங்கு" செய்வதாயிருந்தால் உங்கள் புவனத்தையொழிய வேறெந்தப் பெண்ணையுஞ் சடங்கு செய்ய மாட்டானென்பதை நம்புங்கள்; ஆனால் என் பிள்ளைக்கு இன்னும் ஐந்துவருடம் போனபிறகு கஷ்டகாலம் நேருமென்று தம்பி தானே எழுதியிருக்கிறான்; யாரோ ஒரு சோதிடரைக் கொண்டு பார்க்குஞ் சாஸ்திரி சொன்னதாம்; அது நிசந்தானோ என்று அறிந்துகொள்ள வேண்டி நாங்களும் பிள்ளையின சாதகத்தைப் பார்ப்பித்தோம், சாதகத்திலும் கஷ்டகாலமுண்டெனறுதான் புரோகிதர் சொன்னார்; தம்பியின் கடிதத்தை இங்கே இரகசியமாகக் கொண்டுவந்திருக்கிறேன்; என்பிள்ளை காஞ்சனத்திற்கும் நாங்கள் இதனை இன்னமும் வெளியிடவில்லை" என்று சொல்லித் தான் மறைத்து வைத்திருந்த கடிதத்தை எடுத்துச் சின்னம்மாளிடம் நீட்டினாள். நீட்டிய கடிதத்தைச் சின்னம்மாள் ஏற்றுக்கொண்டு "தங்கைச்சி, எனக்கு இப்பொழுது கண்புகைச்சல், இட்டு வாசிக்கக் கண்ணாடியுமில்லை; என்மகன் கந்தசாமியை மெல்லக் கூப்பிட்டு இதை அவனைக் கொண்டு வாசிப்பிக்கலாமோ" என்று கேட்க, "ஓம், அக்கா, வாசிப்பிக்கலாம்; ஆனால் தங்கைச்சிமார் இப்போதைக்கு அறியாமலிருப்பது நல்லது" என்றாள் சண்பகத்தம்மாள். (வரும்)

கொக்குவில் மேற்கு

# முருகப் பெருமான் ஆலயம்



கொக்குவில்மேற்கு மஞ்சவனப்பதி முருகப்பெருமான் ஆலயத்தில் நிகழும் ஆவணிமாசம் 19ந்திகதி (4-9-43) சனிக்கிழமை துவஜாரோகணம். 27ந்திகதி (12-9-43) ஞாயிற்றுக்கிழமை புதிதாக அமைத்த மகா அலங்கார இரதத்தில் சண்முகப் பெருமான் திருவுலாக்காட்சி (தேர்த்திருவிழா) நடைபெறும்.

(Mis. 1]2. 2—9-9-43)

### கோட்டு விற்பனவு விளம்பரம்

வட்டுக்கோட்டை மேற்கு 1 மருதப்பிள்ளை கதிரவேலுவும் 2 பெண் தையல்நாயகியும்.

வழக்காளிகள்

எதிராக

இல. 352

வண்ணார்பண்ணை கிழக்கு 1 கார்த்திகேசு சண்முகம் இராசசிங்கம் தானுகவும்தனதுபெண்காலஞ்சென்ற செல்லமுத்துவின் பிரதிகாரியஸ்தராகவும்

வண்ணார்பண்ணை கிழக்கு 2 சங்கரப்பிள்ளை நடராசா, எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 352-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1943-ம் ஆண்டு ஐப்பசிமீ (அக்டோபர்) 9-ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல்வட்டி ரூபா 8250-ம் இதற்கு 4-12.42 ந் திகதி தொடக்கம் 19-1-43 திகதி வரைக்கும் 100-க்கு 9 வீத வட்டியும் பின் திகதி தொடக்கம் இறுபடும் வரைக்கும் 100-க்கு9 வீதவட்டியும் இதில்ரூபா150 இறுபட்டது.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக், யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை கிழக்கிறை குஞ்சிநாகன் வளவும், பெரியான்நாகன் வளவும், செட்டிதாழ்வும் நிலைப்பரப்பு ஏழு (7ம்) குளி 2-ம் கிணறும், கல்வீடுகளும், மற்றும் செய்பயிர் வான்பயிர்களும் [இது 1923-ம் ஆண்டு மாசி மாதம் 12-ம்திகதி உலாந்தா மேஸ்தர் எம். செல்லத்துரையால் 19123-ம் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்ட படத்தில் முதலாம் துண்டு] எல்லை கிழக்கு றெயில் றோட்டு வடக்கு வயிரவன் கணபதியின் ஆதனம், மேற்கு சுப்பிரமணியர் முத்தையா பெண் காலஞ்சென்ற இராசம்மாவின் உரிமைக்காரருக்கும் பங்காளருக்கும், வயித்திலிங்கம் பெண் செல்லம்மாவிற்குமுரிய ஆதனங்கள். தெற்கு குமாரவேலுப்பிள்ளை பெண் கண்ணம்மாவுக்குரிய ஆதனம். இதடங்கலும். முற்பதிவு D $^{1}\frac{40}{85}$.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Licensed Auctioneer.

தெல்லிப்பழை
3—9—43

Mis 119—9.9-43&30.9.43

### உணவு உற்பத்திக்கு அத்தியாவசியப் படையினர்

அத்தியாவசியத் தொழிலாளர் படைப் பிரிவைச் சேர்ந்த மூன்னூறு வீரரும் இரு இன்ஸ்பெக்டர்களும் அனுராதபுரத்தில் உணவு உற்பத்தியைநடத்தும்பொருட்டுச் சென்ற திங்கட்கிழமை குறித்த நகருக்குப் பிரயாணமாயினர்.

### இலங்கைஆதரவுக்குநன்றி

மாலுமிகளின் ஜோர்ஜ் மன்னர் நிதித் தலைவர் இலங்கை அனுப்பிய 1500 பவுன் நன்கொடைக்காக நன்றி தெரிவித்து மேன்மைதங்கிய தேசாதிபதிக்கு ஒரு கடிதமெழுதுகையில் யுத்த நிதிக்காக இலங்கை மக்கள் தாராளமாகப் பணஉதவியளித்தமை குறித்துப் பொதுச் சபை மிக்க திருப்தியடைந்திருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்.

### களுத்துறைச் சுப்பிறீங்கோடு ஆரம்பம்

களுத்துறைச் சுப்பிறீங்கோட்டு விசாரணை நேற்றுக்காலை நகரமண்டபத்தில் நீதிபதி மிஸ்றர் டி. ரெட்ஸர் தலைமையில ஆரம்பமாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்மேற்கு ஸ்ரீவிசுவேசப் பிள்ளையார் கோயிற் பரிபாலன சபை

## 2-வது வருடாந்தக் கூட்டம் (புரட்டாதி 1942—ஆவணி 1943)

மேற்படி கோயிற் பரிபாலன சபைக் கூட்டம் கோயில் மூன்றிலில் (4-9-43) சனிக்கிழமை பிற்பகல் 6½ மணியளவில் டக்ரர் சி. துரையப்பா அவர்கள் தலைமையில் தேவார பாராயணத்துடன் கூடியது. ஏறக் குறைய 40 பேர் சமுகமா யிருந்தார்கள். காரியதரிசி திரு. கா. தில்லையம்பலம் B. A. அவர்களின் அறிக்கைவருமாறு:

இச்சபையின் இரண்டாவது வருட அறிக்கையை நிறைவேற்றுவதில் உங்கள் சபை சந்தோஷப்படுகிறது.

இவ்வாண்டிலும் உங்கள் நிர்வாகசபை தனது காரியங்களைப் பூரண திருப்தியுடன் நடாத்தக் கூடியதா யிருந்ததென்று சொல்வதற்கில்லை. நற்கருமங்கட்குத் தூர்ச்சகுனங்கள் குறுக்கிடுவது சகஜம். இது இச்சபையைப் பொறுத்த மட்டிலும் உண்மையே. உங்கள் நிர்வாக சபை எந்த கஷ்டங்களுக் கிடையிலும் உற்சாகத்துடன் கடமையாற்றியது பெருமை கொள்ளக் கூடிய விஷயம்.

இவ்வாண்டில் 12 மாதாந்த நிர்வாக சபைக் கூட்டங்கள் நடைபெற்றன. அங்கத்தவர்கள் தொகை 112.

ஸ்ரீ தி. அண்ணாமலை யவர்களிடமிருந்து கோவிற் கடைகளின் வாடகைப் பணத்தைப் பெறவேண்டு மென்றும், நன்கொடை உறுதி உடன்படிக்கையை நிறைவேற்ற வேண்டு மென்றும் சென்ற ஆண்டின் நிர்வாகசபையால் முடிவு செய்யப்பட்டு வருடாந்தக் கூட்டத்தில் மகாசபையால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதன் பிரகாரம் போதிய அறிவித்தலோடு அவரை நேர்முகமாகக் கண்டு பேசியும், உங்கள் நிர்வாகசபையின் பிரயாசை பலன் அற்றுப் போகக் கோட்டில் அவருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டது. அதில் கடைகளின் வாடகையை இவ்வருடம் நவம்பர்மாதம் 1-ம் திகதி முதல் பிரசித்த வலத்தில் விற்று அதனால் வரும் பணத்தைக் கோட்டில் கட்டும்படியும் இருபகுதியாரின் விருப்பப்படியே அப்பணத்தைச் செலவு செய்யும்படியும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இது இவ்வழக்கின் பிரதான பகுதி. மற்றது இனி விளக்கத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

பிரம்மஸ்ரீ பி. பாலசுப்பிரமணிய ஐயர் அவர்களிடமிருந்து கோவிலின் சிலஅசைவுள்ள பொருட்களைப்பெறுதற்காகத் தொடர்ந்த வழக்கில் 97 ரூபாய் அறவிடும்படியாகச் சபையின் சார்பாகத் தீர்மானிக்கப்பட்டது. அப்பணத்தை அறவிடுதற்கு அவருக்குக் கட்டளை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

மேற்கூறிய அய்யர் அவர்கள், இச்சபையின் உரித்தையும் தத்துவத்தையும் அங்கீகரியாது அதற்கு முரண்பாடாக நடந்து வருவதால் அவரைப் பூசை செய்வதினின்றும் நிற்பாட்டி, கோயில் வீட்டை விட்டு அகலுமாறு அறிவித்தல் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர் அதனை ஏற்றுக் கொள்ளாவிடில் கோட்டு மூலமே அவரை நீக்கவேண்டி வரும்.

கோவிலின் நித்திய நைமித்தியங்கள் ஒழுங்காக நடைபெறுகின்றன. வழமை போல் விசேட விழாக்கள் அவ்வவ்வுபயகாரரால் சிறப்பாக நடாத்தப் பெறுகின்றன. உற்சவத்தால் பெற்ற மிச்சப்பணம் ரூபாய் 1,17.00 அத்துடன் வேறுபணமும் சேர்த்து ரூபாய் 126 க்கு பெருச்சாளி வாகனம் திருத்தி யமைக்கப்பட்டது. ஸ்ரீ தி. அண்ணாமலை அவர்களால் 1941-ம் ஆண்டுக்கு முன் அடகு வைக்கப்பட்ட கோவிலுக்குரிய வெள்ளிக்குடம் பஞ்சாலாத்தி என்பவை 113ரூபா செலவிட்டுப் பெற்றுப் பின்னரும் கோவிற் தளபாடத்துடன் சேர்க்கப்பட்டது.

பிரம்மஸ்ரீ பி. குமாரசுவாமிக் குருக்களின் இளைய குமாரர் கார்த்திகேச அய்யர் அவர்களால் கோவிற் கருமங்கள் தற்போது செவ்வனே நடாத்தப் பெறுகின்றன. வெள்ளிக்கிழமை தோறும் எண்ணெய்ச் செலவுக்கு உதவி புரிய முதலியார் ச. செல்லப்பா அவர்கள் முற்பட்டமை மிகவும் பாராட்டற் குரியது. உற்சவ காலங்களிலும் ஏனைய விசேட விழாக்களிலும் உதவி புரிந்தவர்களில் திரு. சு. நாகேந்திரம், திரு. ப. சோமசுந்தரம் மகன் வைத்தியலிங்கம் அவர்களது உதவி குறிப்பிடத் தக்கது.

காரியதரிசியாய்க் கடமை ஆற்றிய திரு. க. அ. வீரவாகு அவர்கள் சென்ற மார்கழி மாதம் வேறு இடத்துக்குத் தமது உத்தியோகம் காரணமாக மாற்றப்பட அவ்விடத்திற்கு திரு. கா. தில்லையம்பல மவர்கள் தெரிவு செய்யப்பட்டார். நிர்வாகசபை அங்கத்தவர்களில் ஒருவரா யிருந்த திரு. க.சிவப்பிரகாசம் அவர்கள் சென்ற பங்குனி மாதத்தில் விலக, அவ்விடத்திற்குத் திரு. வ. ஆறுமுகம் அவர்கள் தெரிவு செய்யப்பட்டார். நிர்வாகசபை முடிவுகள் யாவும் ஏகமனதாக நிறைவேறியமை அங்கத்தவர்களது ஒற்றுமையையும், விஷயங்களின் அத்தியாவசியத்தையும் புலப்படுத்தக் காணலாம். கோவில் தளபாட அட்டவணை, வரவு செலவுக் கணக்கு என்பவற்றைப் பரிசோதனை செய்த முதலியார் திரு. செல்லப்பா அவர்களுக்கும் ஏனைய வகைகளில் எல்லாம் நிர்வாக சபையுடன் ஒத்துழைத்த சங்க உத்தியோகஸ்தர் யாவர்க்கும் சபையின் நன்றி உரித்தாகுக.

கோவில் அர்ச்சகராயிருந்து செவ்வனே தம் கடமையை யாற்றிய பிரம்மஸ்ரீ. கு. இரத்தினசபாபதி அவர்களின் பிரிவு பெரிதும் கவலைக் கிடமானது. அவர்களின் பிராமண அநுட்டானமும் ஒழுக்கமும் பெரிதும் போற்றற்குரியது. அவரது சேவை ஒருபோதும் மறக்கற் பாலதன்று. அதை இச்சபை மிகவிசனத்துடன் குறிப்பிடுகிறது.

'மேன்மைகொள் சைவநீதி' இப் பரிபாலன விஷயத்திலும் விளங்க வேண்டுமென்னும் குறிக்கோளுடன் உங்கள் நிர்வாகசபை தொண்டாற்றி வருகிறது. அதைப் பூர்த்தியாக்கும் பொறுப்பை இச்சபை ஸ்ரீ விசுவேசப் பெருமானின் சந்நிதியில் ஒப்புவித்து இவ்வறிக்கையை நிறைவேற்றுகிறது.

பின்னர், மனேச்சரும் தனாதிகாரியுமாகிய திரு. சு. பதஞ்சலி அவர்களின் வரவு செலவுக் கணக்கு வாசிக்கப்பெற்று அங்கீகாரம் பெற்றது.

புதிய நிர்வாக சபையின் அங்கத்தவர்கள் பின்வருமாறு தெரிவு செய்யப்பெற்றனர்.

திருவாளர்கள்: 1 சி. துரையப்பா, 2 சு. நாகேந்திரம், 3 சி. துரையப்பா, 4 சு. பதஞ்சலி, 5முதலியார். ச. செல்லப்பா, 6 கா. தில்லையம்பலம் B. A., 7 ச. கார்த்திகேசு, 8 க. சங்கரப்பிள்ளை, 9 க. மயில்வாகனம், 10 சு. த. நடராசா, 11 சி. சபாரத்தினம், 12 தி. செல்லத்துரை.

இற்றில் மேற் சொல்லிய நிர்வாக சபை கூடி இவ்வாண்டுக்கு அக்கிராசனராக திரு. சு. பதஞ்சலி, காரியதரிசியாக க. மயில்வாகனத்தை, மனேச்சரும் தனாதிகாரியாகவும் முதலியார் ச. செல்லப்பா ஆகியவர்களைத் தெரிவு செய்தது.

# விவாகம்

## சுப்பிரமணியம்-புவனேசுவரி

இருபாலை திரு. T. வைத்தியலிங்கமவர்களின் புதல்வரும், சமாதான நீதிவானும் டக்டருமாகவுள்ள S. சுப்பிரமணியமவர்களின் மருகரும், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆசிரியர்களுளொருவருமாகிய திரு. சுப்பிரமணியமவர்களுக்கும், தெல்லிப்பழை, பிறக்டராக விளங்கிய திரு. வி. குமாரசுவாமியவர்களின் புதல்வியும் நியாயவாதி திரு. C. வன்னியசிங்கம், திரு. பாலசிங்கமென்னுமிவர்களின் சகோதரியுமாகிய ஸ்ரீமதி. புவனேசுவரியம்மாளுக்கும் சென்ற ஞாயிற்றுக்கிழமை (7-9-43) காலை 7 மணிக்குமேல் நிகழ்ந்த சுபமுகூர்த்தத்தில், மணமகளில்லத்திற்றே விவாகம விதிப்படி சிறப்புற நிறைவேறியது. கொண்டாட்டம் அடுத்தநாளும் நடைபெற்றது. தம்பதிகள சகல ஐசுவரியங்களையும் பெற்று இன்புற்று இனிது வாழும் வண்ணம் எல்லாம்வல்ல இறைவன் திருவருள் புரிவாராக.

# திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

(† இசைத் தட்டு)

### வெள்ளி செப் 10

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 திரைகானம்† 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 டி வி ஜனகம் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 டி வி ஜனகம்பாட்டு 2 தமிழில் செய்திகள் 2–05 கல்வி ஒலிபரப்பு 2.30 முடிவு.

மாலை 5 திருப்புணித்துறை ஜி விஸ்வநாதபாகவதர் பாட்டு 5-40 துரான்ஷீப் 6 அருப்புக்கோட்டை எஸ் கணேசபிள்ளை நாகஸ்வரம் 6.30 ஆங்கிலத்தில்செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 இலக்கியவாசகம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 புதுவீடு நாடகம் 8 அருப்புக்கோட்டை எஸ் கணேசபிள்ளை நாகஸ்வரம் 8-45 திருப்புணித்துறை ஜி விஸ்வநாதபாகவதர் பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 உலகவிவகாரங்கள் ஆங்கிலம் 10 இசைவேளை† 10-30 முடிவு.

### சனி செப் 11

காலை 7-45 கீதாரம்பம்† 7-50 தமிழில் செய்திகள் 8 நடனகீதம்† 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 கே வி ராமஸ்வாமிஐயர் வயலின் 9 முடிவு.

1 டி கே ஆராவமுதன் பாட்டு 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 தெருப்பாட்டுகள் 2 தமிழில் செய்திகள் 2-05 கே வி ராமஸ்வாமிஐயர் வயலின் 2-30 முடிவு.

மாலை 5 டி கே ஆராவமுதன் பாட்டு 5-40 ஸ்கந்தபுராணம் விளக்கம் 6 திரை இசை† 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6.40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 புது இலக்கியம் கவிதை 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7–45 மதராஸில் உள்ளபடி 9–15 டி என் ராஜரத்தினம்பிள்ளை நாகஸ்வரம்† 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்துசெய்திகள் 9-45இசைக்கதம்பம் 10 சுப்ரமண்யபாரதி பாடல்கள் 10-30 முடிவு.

### ஞாயிறு செப் 12

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 கோஷ்டி கானம் 8.15 ஆங்கிலத்தில் செய்திகள் 8–30 டி என் ஹம்ஸாநீலகண்டம் வீணைபாட்டு 9 முடிவு.

12 திரைக்கதம்பம்† 12 30 ஒலிமலர் 1-30 ஆங்கிலத்தில்செய்திகள் 1-40 என் ஆர் ஸ்ரீனிவாச ஐயங்கார்பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 இசைக் கதம்பம்† 2.30 முடிவு.

மாலை 5 என் ஆர் ஸ்ரீனிவாசஐயங்கார்பாட்டு 5-40 தேவாராதனை 6 டி என் ஹம்ஸா நீலகண்டம் வீணை பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செயதிகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7.15 குடிசைப்போரணி பேச்சு 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழ்ல்செய்திகள் 7-45 எம் கே கோவிந்தராஜன் பாட்டு 9 சர்வகலாசாலைகளுக்கு ஆங்கிலப் பேச்சு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45மோஹனம் 10இசைவேளை† 10-30 முடிவு.

### திங்கள் செப் 13

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழ்ல்செய்திகள் 8 திருச்சி வாத்யகோஷ்டி 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 விராலிமலை ஏ என் சிங்காரம் நாகஸ்வரம் 9 முடிவு.

1கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 மதுரை டி கே பாலகிருஷ்ண ஐயங்கார் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 விராலிமலை ஏ என் சிங்காரம் பாட்டு 5-45 இசைப்பயிற்சி 6 மதுரை டி கே பாலகிருஷ்ண ஐயங்கார் பாட்டு 6.30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 செய்திச் சித்திரம் 7-30 அறிவிப்புகள் 7.35 தமிழ்ல்செய்திகள் 7.45 சா ஓ வீரத்தாய் நாடகம் 8 செம்பை வைத்தியநாத பாகவதர் பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 ஸிதார் ஜலதரங்கம் 10 திரைகானம் † 10-30 முடிவு.

## அறிவித்தல்

பாதுகாப்பு (நெற் செய்கை) பிரமாணங்களின் கீழ் நான் அடுத்த கால போகத்திற்கு வவுனியா, ஈறற் பெரியகுளம், செட்டிகுளம், குளங்களின் கீழ் நான் பொறுப்பெடுக்கும் நெற்காணிகளைச் செய்கை பண்ணுவதற்குக் கமம் செய்வோரிட மிருந்து விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன.

2 விதை நெல் என்னல் கொடுக்கப்படும், ஆனல் வசிப்பதற்கு இடமும், எருமை மாடுகளும் விண்ணப்பக்காரர் தாங்களே ஒழுங்கு செய்து கொள்ள வேண்டும்.

3 நெல் மிதித்தவுடன் இந்த டிஸ்திறிக்கிலே உள்ள வழக்கப்படி 'வாரம்' முறைக்கு பங்கு கொடுக்கப்படும். கூடிய விபரங்கள் கீழே கைபொப்பமிட்டவரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

எஸ். எம். டவ்,
அரசாட்சி உப ஏஜன்றர்.

கச்சேரி, வவுனியா, 6-9-43.
G. 25, 9-9-43.




## சிறுபிள்ளை வைத்தியத்திலும் ஏனைய வைத்தியங்களிலும் சித்திபெற்ற
# சில்லாலை முத்துவைத்தியசாலை

சாதாரணமாகச் சிறுவர்களுக்கு வரும் கிரந்தி, சலதோஷம், வயிற்றோட்டம், காய்ச்சல் முதலிய நோய்களைத் தணிக்கும் ஒப்புயர்வற்ற அரிய பெரிய மருந்துகளும் நெடுநாட்பட்ட இருமல் மேகம் கிரந்தி வாதங்களை அகற்றும் அனுபவம் வாய்ந்த சிறந்த மருந்துகளும், எண்ணெய்வகைகளும் எம்மிடம் ஏராளமாயுண்டு. ஏழைகளையும் தனவந்தர்களையும் ஒரேசீராய் நடத்தும் அரசினரின் அங்கீகாரம் பெற்ற சில்லாலை முத்து வைத்தியர்.
அ. செபஸ்தியாம்பிள்ளை. பெரியதெரு, நம். 160, மேல்வீடு, யாழ்ப்பாணம்.
(Q. 30. 11-5.43—10-8.43)

## குறைந்த விலையில்
# துணிகள்

ஷேட்துணிகள், துவாய்கள் பஞ்சாலும் பட்டாலும் ஆகிய சேலைகள் முதலியவை.

## R. S. M. டெக்ஸ்டைல் ஸ்ரோர்ஸ்

மொத்தத்துக்கும் சில்லறைக்கும் விற்கும் வியாபாரிகள்

பெரியகடை—யாழ்ப்பாணம்.
K. A. இரத்தினசிங்கம்,
பங்காளர்.
Y 19. 4-3-42——3-3-44


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Thursday 9, September, 1943.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org